W

Reg. No. | | | | | | | |

# 12th காலாண்டுத் தேர்வு - 2018

## பொதுத்தமிழ்

நேரம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். 2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : 1) விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

### பகுதி – அ (செய்யுள் உரைநடை)

**I. பலவுள் தெரிக (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக)** **6 x 1 = 6**

1. பொருந்திய விடை தேர்க

| ஆசிரியர் | | பாடல் தலைப்பு |
|---|---|---|
| 1. இளங்கோவடிகள் | – | அகநானூறு |
| 2. பாரதிதாசன் | – | சிலப்பதிகாரம் |
| 3. வீரமாமுனிவர் | – | பாண்டியன் பரிசு |
| 4. மதுரை – மள்ளனார் | – | தேம்பாவணி |

அ) 2 3 4 1 ஆ) 3 2 1 4 இ) 4 1 3 2 ஈ) 1 3 2 4

2. நித்திலக் கோவையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை அ) 100 ஆ) 120 இ) 180 ஈ) 200

3. நன்மான், ஒழுகுநீர் ஆகியவற்றின் இலக்கணக்குறிப்பு அ) வினைத்தொகை, பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை, வினையெச்சம் இ) பண்புத்தொகை, வினைத்தொகை ஈ) உம்மைத் தொகை, பெயரெச்சம்

4. வாங்கிய ஆழி தன்னை வஞ்சர் ஊர் வந்த தாமென றாங்குயர் மழைக் கண்ணீரால் ஆயிரம் கலசம் ஆட்டி இவ்வடியில் பயின்று வரும் ஆழி எனும் சொல்லிற்கான இரு பொருள்........ அ) கடல், சக்கரம் ஆ) கடல், மோதிரம் இ) மோதிரம் தேர் ஈ) சங்கு, கடல்

5. "கால்வாய்" இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழையே கவிதை" எனக் கூறியவர் அ) கோலரிட்ஜ் ஆ) கீட்ஸ் இ) ஜான் ரஸ்கின் ஈ) வோர்ட்ஸ் வொர்த்

6. "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" அ) அகநானூறு ஆ) குறுந்தொகை இ) நற்றிணை ஈ) ஐங்குறுநூறு

**II. அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக)** **3 x 2 = 6**

7. "புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி
நெடுந்தேர் ஊர்மதி வலவ" – இவ்வடிகள் உணர்த்தும் செய்தி யாது?

8. வையகமும் வானகமும் ஒப்பாகா – எதற்கு?

9. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?

10. வீரமா முனிவர் இயற்றிய நூல்கள் யாவை?

**ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** **2 x 2 = 4**

11. பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்குத்தரும் வரையறை யாது?

12. உழவு எந்த நிலத்தில் தோன்றி எந்த நிலத்தில் சிறப்படைந்தது?

13. சமரசம் பரவாமைக்குக் காரணங்கள் யாவை?

**III. அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** **2 x 4 = 8**

14. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக் கொள்ளல் வேண்டும்? ஏன்?

15. "நல்லது செய்த லாற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" – இடஞ்சுட்டி விளக்குக.

16. குறிஞ்சித்திணை (அல்லது) பொருள் மொழிக் காஞ்சித் துறையை விளக்குக.

**ஆ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** **2 x 4 = 8**

17. இசைத் தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?

18. அறுமுறை வாழ்த்து – தொல்காப்பியர் வழிநின்று விளக்குக.

19. பழந்தமிழர் மேற்கொண்ட தொழில்கள் யாவை?

**IV. அ) நெடுவினா (இருபது வரிகளில் விடை தருக)** **2 x 6 = 12**

20. "செய்ந்நன்றியறிதல்" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகள் எக்காலத்திற்கும் பொருந்தும் என்பதை நிறுவுக. **(அல்லது)** சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளை இருபது வரிகளில் மிகாது எழுதுக.

21. தமிழ் – உயர் தனிச் செம்மொழி – இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக. **(அல்லது)** கோ – கோவன் – என்னும் சொற்களைப் பற்றிய பாவாணர் கருத்துக்களைத் தொகுத்து வழங்குகக.

**ஆ) அடிமாறாமல் எழுதுக.** **4 + 2 = 6**

22. அ) "கண்டனென்" – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்
ஆ) ........"அறிவு" என முடியும் திருக்குறள்

## பகுதி – ஆ (இலக்கணம் துணைப்பாடம், மொழிப்பயிற்சி)

**V. பலவுற் தெரிக (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக)** **8 x 1 = 8**

23. தழீஇ – சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) இன்னிசையளபெடை ஆ) சொல்லிசையளபெடை இ) இசை நிறையளபெடை ஈ) நேரிசையளபெடை

24. வேலி என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) புதுமைப்பித்தன், ஆ) ஜெயகாந்தன் இ) அய்க்கண் ஈ) ராஜம்கிருஷ்ணன்

25. ''உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'' எனும் வழி பயின்று வரும் சொல்
அ) தென்கரை ஆ) கற்கொடி இ) அறனல்ல ஈ) தினந்தினம்

26. ''டயாபெட்டிக் பேஷண்ட் இச்சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லைத் தேர்க
அ) சர்க்கரை நோயாளி ஆ) மன அழுத்த நோயாளி இ) வயிற்று வலி நோயாளி ஈ) இருதய நோயாளி

27. பொருந்தாத இணையைத் தேர்க.
அ) வேலி – இராஜம் கிருஷ்ணன் ஆ) மகன் – செயப்பிரகாசம் இ) கிழிசல் – அய்க்கண் ஈ) பால்வண்ணம் பிள்ளை –புதுமைப்பித்தன்

28. மாமணி – சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) அடுக்குத் தொடர் ஆ) வினைத் தொடர் இ) உரிச்சொற்றொடர் ஈ) வினையெச்சம்

29. பால்வண்ணம்பிள்ளை எனும் சிறுகதையின் மூலம் நாம் அறிந்து கொள்வது
அ) ஒற்றுமையே வலிமை ஆ) சிறுதுளி பெருவெள்ளம் இ) சிறு குடும்ப சீரான வாழ்வு ஈ) பேராசை பெரு நஷ்டம்

30. ஆணை, ஆனை இச்சொற்களுக்குரிய பொருளறிந்து தேர்க.
அ) கடிதம், பறவை ஆ) கட்டளை, யானை இ) கூப்பிடுதல், பற்று ஈ) யானை, விலங்கு

**VI. குறுவினா (எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக)** **7 x 2 = 14**

31. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
ஆ) வெண்ணிலா கலக்கலவென்றுச் சிரித்தாள்
ஆ) வேட்டுவ பெண்கள் விளையாட போவதுண்டு என்றுச் சஞ்சீவிபர்வதச் சாரல் பாடுகிறது. *CTEN*

32. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ) எனது மகன் ஆ) ஒன்றோ அல்லது இரண்டோ தருக.

33. கொச்சைச் சொற்களை நீக்கி எழுதுக. அ) கோளி முட்டை தாவாரத்தில் உருண்டது ஆ) ஒனக்கு புடிச்சத சாப்புடு

34. பிற மொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக.
அ) Smart Phone ஆ) டென்ஷன் இ) கும்பாபிஷேகம் ஈ) சிலிம்மாக

35. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) சேவல் கத்தியது நாய் அலறியது ஆ) தென்னை இலையால் கீற்று செய்தார்கள்.

36. இலை, இளை – பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க.

37. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக? அ) மானுழை ஆ) கடுந்திறல்

38. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) ஒழிந்து ஆ) துறவற்க

39. வல்லினம் மிகும் இடங்களுக்குரிய விதி கூறுக.

**VII. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. (மொழித்திறன் பயிற்சிகள்)** **3 x 4 = 12**

40. உவமையணி (அல்லது) சொற்பொருள் பின்வருநிலை அணியைச் சான்றுடன் விளக்குக.

41. தமிழாக்கம் தருக.
அ) Look before you leap.
ஆ) Union is strength.
இ) Time and tide wait for none
ஈ) Indian People always dislike violence.

42. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக் கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்தெழுதுக.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே – நின்று
நித்தம் தவஞ்செய் குமரி எல்லை – வட
மாலவன் குன்றம் இவற்றிடையே – புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு
கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு – நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் – மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு
– பாரதியார்

43. பின்வரும் கவிதை தலைப்பில் உமது சொந்தப்படைப்பாகக் கவிதை ஒன்றை 10 அடிகளுக்கு மிகாமல் எழுதுக.
வான்மேகம் **(அல்லது)** தென்றல்

**VII. பின்வரும் துணைப் பாடப் பகுதி வினாவிற்கு இருபக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.** **1 x 6 = 6**

44. ''மகன்'' என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக. **(அல்லது)**
''பால் வண்ணம்பிள்ளை'' – இச்சிறுகதையின் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக வரைக.